**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.4063/ஆ5/2025, நாள்.25/08/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – பள்ளிக் கல்வி மானியக் கோரிக்கை எண். 43 – மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண். 11 – அரசுப் பள்ளிகளில் பயின்று சாதனை புரிந்த மாணவர்களை அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக (school Ambassadors) நியமித்தல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு

பார்வை

1. 2025–2026ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை எண். 43 – மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண். 11
2. அரசாணை நிலை எண். 112 பள்ளிக் கல்வித் (பக5(1)) துறை நாள். 15.05.2025
3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.025232/எம்1/இ1/2025, நாள். 08.08.2025

.....

25.04.2025 அன்று நடைபெற்ற சட்டப் பேரவை கூட்ட பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

**<u>"அறிவிப்பு எண். 11" பள்ளிகளின் தரமும் செயல்பாடுகளும் அப்பள்ளியில் பயின்ற மாணவர்களின் தற்போதைய நிலையினைக் கொண்டே முடிவு செய்யப்படுகிறது. ஆகவே சமூகத்தில் உயரிய நிலையில் உள்ள முன்னாள் மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக நியமிக்கப்படுவர்".</u>**

பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விக் கனவை நிறைவேற்றும் பொறுப்பில் முன்னிற்கிறது தமிழ்நாடு அரசு. இன்று நம் அரசுப் பள்ளிகள் தன் விழுதுகளை உலகம் முழுவதும் வேரூன்றி, பல சிறந்த மனிதர்களை உருவாக்கிய வரலாற்று பெருமைக்குரியது. அவ்விழுதுகளை (முன்னாள் மாணவர்களை) ஒருங்கிணைக்க மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களால் "விழுதுகள்" முன்னெடுப்பு தொடங்கப்பட்டு சுமார் 8.5 இலட்சம் விழுதுகள் தங்கள் பள்ளியுடன் " நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி" இணையதள பக்கம் வாயிலாகவும் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு வாயிலாகவும் நம் பள்ளி!! நம் பொறுப்பு!! என்ற உணர்வோடு மாணவர்களின் இடைநிற்றலைக் குறைக்கவும் அரசுப் பள்ளிகளில் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கவும், இணைந்து செயல்பட்டு பல்வேறு பங்களிப்புகளை அளித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளியின் மீது மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் பொது மக்களுக்கு நம்பிக்கையை வலுப்படுத்திடவும், அரசுப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு முன்னெடுப்புகளில் முன்னாள் மாணவர்களின் பங்கேற்பை உறுதி செய்யும் பிரநிதியாகவும், முன்னாள் மாணவர்களை அரசுப் பள்ளித் தூதுவர்களாக, (School Ambassadors) நியமித்தல் சார்ந்து பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி செயல்படுமாறு அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மற்றும் சார்ந்த அரசு நடுநிலை / தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவர் மற்றும் உதவி திட்ட அலுவலர் குழுவாக இணைந்து இப்பணிகளை கண்காணித்திடவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பள்ளித் தூதுவர்களாக விண்ணப்பிக்க விருப்பமுள்ள முன்னாள் மாணவர்கள் "நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி" இணையதள பக்கம் வாயிலாக தனிநபராகவோ (அ) தகுதியுள்ள நபர்களின் விவரங்களை சேகரித்து தலைமை ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள Link யை பயன்படுத்தி ஆகஸ்ட் 30 ஆம் தேதிக்குள் விருப்பம் உள்ள முன்னாள் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்ற விவரம் அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. பார்வை 3ல் காணும் செயல்முறைகள்
2. பள்ளிகளின் பெயர் பட்டியல்
3. https://nammaschool.tnschools.gov.in/#/alumni-nomination

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
சார்ந்த அரசு நடுநிலை / தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. உதவித் திட்ட அலுவலர்
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
   வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)